

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.6.2025) முகாம் அலுவலகத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் போட்டியின்றி வெற்றி பெற்ற மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன், மூத்த வழக்கறிஞர் பி.வில்சன், எஸ். ஆர். சிவலிங்கம், திருமதி ரொக்கையா மாலிக் (எ) கவிஞர் சல்மா ஆகியோருக்கு சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.

### அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி – ‘நான் முதல்வன்’ திட்டத்தில் பயின்று

# இந்திய குடிமைப்பணி முதனிலைத் தேர்வில் தமிழ்நாட்டு மாணவர்கள் சாதனை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, ஜூன். 13-**

**அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி மற்றும் “நான் முதல்வன்” திட்டத்தில் பயின்று இந்திய குடிமைப் பணி முதனிலைத் தேர்வில் தமிழ்நாடு மாணவர்கள் சாதனை படைத்துள்ளது குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-**

தமிழ்நாடு அரசின் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியிலும் “நான் முதல்வன்” திட்டத்திலும் பயின்ற நம் மாணவர்கள் UPSC முதனிலைத் தேர்வு முடிவுகளில் இது வரை இல்லாத எண்ணிக்கையில் சாதனை படைத்துள்ளனர்!

முதன்மைத் தேர்வு, நேர்முகத் தேர்விலும் அடுத்து நீங்கள் முத்திரை பதிக்க வாழ்த்துகிறேன். உங்கள் வெற்றிமுகங்களை நேரில் காண ஆவலாய் இருக்கிறேன்.

இந்தச் சாதனைக்கு உறுதுணையாக இருந்த அதிகாரிகளுக்கும் பயிற்றுநர்களுக்கும் என் பாராட்டுகளை உரித்தாக்குகிறேன்! தமிழ்க்கொடி உயர உயரப் பறக்கட்டும்!

இவ்வாறு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டு ள்ளார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (12.6.2025) தலைமைச் செயலகத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு, மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் போட்டியின்றி வெற்றி பெற்ற மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பி. வில்சன், எஸ். ஆர். சிவலிங்கம், ரொக்கையா மாலிக் (எ) கவிஞர் சல்மா ஆகியோர் தேர்தல் நடத்தும் அலுவலரும், சட்டப்பேரவை கூடுதல் செயலாளருமான பி. சுப்பிரமணியத்திடம் வெற்றி பெற்றதற்கான சான்றிதழ்களை பெற்று கொண்டனர். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உடனிருந்தனர்.

### கீழடி ஆய்வுகளுக்கு ஆதாரம் இல்லை எனக் கூறுவது

# தமிழர் வரலாற்றை ஏற்க மறுக்கும் வன்மம்!

## இரா.முத்தரசன் கண்டனம்!

சென்னை, ஜூன் 13 –

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு முழுவதும் நடந்து வரும் அகழாய்வும், ஆராய்ச்சியும் தமிழர்களின் வரலாறு, பண்பாடு, கலாச்சார மரபுகளின் தொன்மை சிறப்பை தொடர்ந்து வெளிப்படுத்தி வருகிறது.



குறிப்பாக 2015 முதல் இது வரை 5 கட்டங்களாக அகழாய்வு செய்யப்பட்ட கீழடி ஆய்வில் கிடைத்துள்ள 6 ஆயிரத்துக்கும் அதிகமான தொல்லியல் சான்றுகள் தமிழர்கள் மற்றும் தெனிந்தனிய மக்களிடம் நிலவி வந்த மதச்சார்பற்ற கலாச்சாரத்தை மறுக்க முடியாத அளவில் அறிவியல் ஆதாரங்களை முன் வைத்துள்ளது.

ஒன்றிய கலாச்சாரத்துறை அமைச்சர் செகாவத், கீழடி ஆய்வில் கண்டறிந்த தரவுகளுக்கு அறிவியல் ஆதாரம் இல்லை என கூறுவது தமிழர் தொன்மை வரலாற்றை மறுக்கும் வன்மத்துடன் அணுகும் செயலாகும்.

இவ்வாறு இரா.முத்தரசன் தெரிவித்துள்ளார்.



தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் தெற்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் கூட்டத்தில் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் மீன் வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். உடன் ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ். உமரிசங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், திருச்செந்தூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் சஃபி சுலைமான், மாவட்ட துணைச் செயலாளர் ஜெயக்குமார் ரூபன், ஆறுமுக பெருமாள், ஜெபதங்கம் பிரேமா, தலைமை செயற்குழு உறுப்பினர் அ.பிரம்மசக்தி, ஒட்டப்பிடாரம் இளைஞரணி துணை அமைப்பாளர் தங்கதுறை பாண்டியன், ஒன்றிய செயலாளர்கள் ஜெயக்கொடி, ஏ.பி.ரமேஷ், டி.பி.பாலசிங், நவீன் குமார், இலங்கோ மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

கிருஷ்ணகிரி கிழக்கு மற்றும் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 15.06.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 3.00 மணி | கிருஷ்ணகிரி கிழக்கு | சுபம் ஹால், ஸ்ரீ வெங்கடேஸ்வரா காம்ப்ளக்ஸ், பெங்களூரு பிரதான சாலை, கிருஷ்ணகிரி. |
| 16.06.2025 திங்கள்கிழமை | காலை 10.00 மணி | கிருஷ்ணகிரி மேற்கு | ஆனந்த் கிராண்ட் பேலஸ், சிஷ்யா பள்ளி அருகில், தளி சாலை, ஓசூர். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 12-06-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

